**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.153/2023
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : உமாசங்கரி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of March 2024.

15.03.2024

(எதிரிகள் 1, 3, 4, 5 ஆஜர், 2 மற்றும் 6 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.10.2022 ம் தேதி இரவு 09.05 மணியளவில் அருள்பால்ராஜ், த/பெ.ஜேசுராஜ் என்பவர் சிகிச்சைக்காக வந்தார்.

2. அருள்பால்ராஜ் என்னிடம் முகம் தெரிந்த நான்கு ஆண்கள் மற்றும் ஒரு பெண் ஆகியோர் கத்தி மற்றும் அருவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(i) இடது மணிக்கட்டிற்கு மேல் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

(ii) இடது விலா எலும்பிற்கு கீழ் வெட்டுக்காயம் காணப்பட்டது.

3. மேற்படி காயத்திற்கு நான் சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு உண்மை நகல் நான் வழங்கியது தான். **(அருள்பால்ராஜ்க்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு உண்மை நகல் அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**4.** அன்றைய தினம் இரவு 09.05 மணியளவில் ஜோவித்பிரியா, க/பெ.அருள்பால்ராஜ் என்பவர் சிகிச்சைக்காக வந்தார்.

**5.** ஜோவித்பிரியா என்னிடம் முகம் தெரிந்த நான்கு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் ஆகியோர் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(i) வலது நெற்றியில் 3x3cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(ii) கழுத்தின் பின்பக்கம் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

**6.** மேற்படி காயத்திற்கு நான் சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு உண்மை நகல் நான் வழங்கியது தான். **(ஜோவித்பிரியாவிற்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு உண்மை நகல் அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) விபத்துபதிவேட்டின் அசலை மருத்துவமனையில் வைத்து பராமரிப்போம் என்றால் அசலை விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிடுவோம் நகலை தான் நாங்கள் பராமரித்து வருவோம். இவ்வழக்கில் விசாரணையின்போது விபத்துபதிவேடுகள் இரண்டையும் நான் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் சிகிச்சைக்கு வந்தவுடன் நான் காவல்துறைக்கு தகவல் அனுப்பினேன் என்றால் சரிதான்.

2) காயம்பட்ட இரண்டு நபர்களுக்கும் வெளிப்புற நோயாளியாகத்தான் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். காயம்பட்ட பட்ட ஜோவித்பிரியாவிற்கு குறிப்பிட்ட முதலாவது காயம் கூர்மையான ஆயுதத்தை தவிர வேறு ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட இரண்டாவது காயம் தரையிலோ, சுவற்றிலோ உரசினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

3) அருள்பால்ராஜ்க்கு ஏற்பட்ட முதலாவது காயம் ஒரு நபர் கூர்மையான ஆயுதத்தை பிடித்து இழுக்கும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். இரண்டு பக்கமும் கூர்மையான கத்தியால் குத்தினால் அருள்பால்ராஜ்க்கு ஏற்பட்ட இரண்டாவது காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான்.